T.e-019

**001/DM/23**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

குறிப்பு :

1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

2. **வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

3. **கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

Gandhiji loved and respected truth more than anything else. He fought his whole life to uphold the value of truth. From his experiment with truth, he came to know that there could not be a God other than truth. He taught us that our thought, word and deed should be one. He preached what he practised.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. அன்றாட வாழ்வில் அறிவியல்

3. மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவுகள்

4. பதினைந்து நாட்களுக்கு மருத்துவ விடுப்பு வேண்டி துறைத்தலைவருக்கு கடிதம் எழுதுக. (10)

[Turn over

## பகுதி — II

5. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும். (5 × 1 = 5)

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்...." என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், "அம்மா அனுப்பிவிட்டாரா?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுதான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப்பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச்சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச்சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

வினாக்கள் :

(அ) காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் யார்?

(ஆ) சிறுவனும் சிறுமியும் எதற்காக காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?

(இ) காமராசர் செய்த உதவி யாது?

(ஈ) மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் ————————.

(உ) குழந்தைகள் காமராசரிடம் தங்கள் பெற்றோரின் வருமானம் குறித்து யாது கூறினர்?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. (5)

கீர்த்தனா : ————————————————?

தாத்தா : இது பொம்மை கடை.

கீர்த்தனா : ————————————————?

தாத்தா : பறவைகள், விலங்குகள், தெய்வங்கள், தலைவர்கள் போன்ற பலவகையான பொம்மைகள் இருக்கின்றன.

கீர்த்தனா : ————————————————?

தாத்தா : சுட்டகளிமண்ணால் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. உனக்கு என்ன பொம்மை வேண்டும்?

கீர்த்தனா : எனக்கு திருவள்ளுவர் பொம்மை வேண்டும் தாத்தா.

தாத்தா : ————————————————?

கீர்த்தனா : மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கூறியவர் திருவள்ளுவர். அதனால்தான்

தாத்தா : சரியாகக் கூறினாய் உனக்கு திருவள்ளுவர் பொம்மையை வாங்கித்தருகிறேன்.

## பகுதி — III

### மொழிப் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40 × 1 = 40)

7. 9400 என்ற எண்ணை எழுத்தால் எழுதுக.

8. 'உயர்வு' என்ற சொல்லை சொற்றொடரில் அமைத்து எழுதுக.

9. NEWS – கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க.

10. தமிழ் மாதங்களில் இறுதிமாதத்தின் பெயர் என்ன?

11. உயிர் எழுத்துக்களின் வகைகள் யாவை?

12. விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.

பீ ____ பூ ____ பே ____ ____

13. உரிய நிறுத்தற்குறியிடுக.
அம்மா பொருட்காட்சி மிகநன்றாக இருக்கும் போல் இருக்கிறதே அங்கு போகலாமா

14. கீழ்க்கண்ட பட்டப்படிப்புப் பெயரைத் தமிழில் எழுதுக.

B.Sc.

15. தெய்வம், மான், மனிதன், இவற்றில் அஃறினை எது?

16. நெடில் எழுத்துக்களை கண்டறிந்து எழுதுக.

ஆத்தோரத்தில் பூத்த மரமோ.

17. பிழை திருத்தி எழுதுக.
யானை கர்ஜிக்கும்.

18. விடைக்கேற்ற வினா அமைத்து எழுதுக.
சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.

19. பெயர்ச் சொற்களை எடுத்து எழுதுக.
ராமன் கதை படித்தான்

20. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்றை எழுதுக.
கயல் –

21. குறில் எழுத்துக்களை கண்டறிந்து எழுது
வளையல் –

22. இரு பொருள் தருக.
ஆறு –

23. அகர வரிசையில் எழுதுக.
மைதிலி, மஞ்சு, மௌனம், மேகம்

24. கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க.
Touchscreen

25. கம்பர் எழுதிய நூலின் பெயர் என்ன?

26. பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.
காது, மூக்கு, உடல், கண்

27. அகல் - இடை எழுத்தை மாற்றி புதிய பெயர்ச் சொல்லை உருவாக்கு.

28. சரியான சொல்லை தேர்ந்தெடுத்து எழுது

ஆடையில் படிவது ______ (கரை, கறை)

29. வினைச் சொல்லை எடுத்து எழுதுக.
மாணவன் புத்தகத்தைப் படித்தான்

30. திணை வகையைச் சுட்டுக.
குதிரை -

31. பால்வகையைச் சுட்டுக.

பசு -

32. சரியான ஒருமை பன்மை கொண்டு முடிக்கவும்.

உலகில் ஏழு கண்டங்கள் உள்ளது.

33. பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.

தஞ்சை பெரிய கோவிலைக் கட்டியவர்.

இராஜேந்திர சோழன்/இராஜ ராஜ சோழன்

34. நிகழ்காலம் - குறிக்கும் சொல்லை எடுத்து எழுதுக.

பாடுவான், ஆடினான், படிக்கிறான்.

35. பிற மொழிச் சொல்லிற்குறிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

சினிமா

சொல்லையும் பொருளையும் பொருத்துக.

36. மான் - பெருமை

37. மாண் - காற்று

38. வளி - வாழ்க

39. வாழி - விலங்கு

40. கொச்சையான பிழைச்சொல்லுக்கு திருத்தம் செய்து எழுதுக.

கோடாலி

41. பின்வரும் சொல்லுக்கு இருபொருள் தருக.

மெய் -

42. பிரித்து எழுதுக.

நாற்பொருள்

43. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

தமிழர் வாழ்வில் இசை சிறந்த இடத்தை பெற்றிருந்தது.

44. கீழ்க்கண்டவை விடையாக அமையும்படி வினா அமைக்கவும்?

நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம்

45. உயிர்நெடில் எழுத்துக்கள் எத்தனை?

46. ஆத்திச்சூடி என்ற நூலை இயற்றியவர் யார்?